1970 ஆகஸ்ட் 31]

Gambling near Tambaram Railway Station.

* 137 *Q.*—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Chief Minister be pleased to state the steps taken to check gambling in front of the ticket booking office on the westernside of Tambaram Railway Station between 8 a.m. and 9 p.m. every day?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தாம்பரம் காவல் நிலையக் காவலரும் ரயில்வேக் காவலரும் தாம்பரம் ரயில்வே நிலையத்தை அடிக்கடி சூதாட்ட வேட்டை நடத்தி சூதாடும் நபர்கள்மீது வழக்குப் பதிவு செய்து வருகிறார்கள்.

திரு. கே. விநாயகம் : இது தொடர்ந்து எத்தனை நாள் நடந்தது? இதிலே எவ்வளவு பணம் பிடிப்பட்டது? அந்தப் பணத்தை கஜானாவிற்குச் செலுத்தினார்களா? இதிலே குற்றவாளிகள் எத்தனை பேர்? எவ்வளவு பேருக்குத் தண்டனை கொடுக்கப் பட்டது? இது இப்பொழுதும் இருக்கிறது என்று சொல்லப்படுகிறதே, அது உண்மையா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இதில் எவ்வளவு பணம் கைப் பற்றப்பட்டது என்ற விவரம் இல்லை. ஆனால் 1969-ம் ஆண்டு வழக்குத் தொடரப்பட்ட நபர்களின் எண்ணிக்கை 47. தண்டனை பெற்றவர்கள் எண்ணிக்கை 47. 1970-ம் ஆண்டு மே மாதம் முடிய வழக்குத் தொடரப்பட்ட நபர்களின் எண்ணிக்கை 10. தண்டனை பெற்றவர்களின் எண்ணிக்கை 10. மேலும் போலீசார் தீவிரமாக நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறார்கள்.

திரு. என். வரதராஜன் : தலைவரவர்களே, சூதாட்டம் ஊருக்கு ஊர் வித்தியாசப்படுகிறது. சில இடங்களில் ஏழை விவசாயிகளிடம் அண்டா கொடுக்கிறோம், குண்டா கொடுக்கிறோம் என்று சொல்லி ஏமாற்றுகிறார்கள். எனவே, இப்படிப்பட்ட சூதாட்டத்தில் உஷார் கவனம் செலுத்த வேண்டுமென்று போலீஸ் இலாக்காவிற்கு முதலமைச்சரவர்கள் உத்தரவிடுவார்களா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : ஏற்கனவே இதிலே போதிய கவனம் செலுத்த வேண்டுமென்று போலீஸ் துறையினருக்கு எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது.

திரு. கே. விநாயகம் : கேள்வி, தாம்பரத்தைப்பற்றியதாக யிருந்தாலும்கூட, சென்னை நகரத்திலே எங்கு பார்த்தாலும் வீதி முனைகளிலே, நினைத்தவர்கள் துண்டை விரித்துப்போட்டு ஏமாந்த வர்களை இந்தச் சூதாட்டத்தில் ஈடுபடச் செய்து பணம் பறிக்கிறார் களே, அது அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்ததா? இதைத் தடுத்து நிறுத்துவதற்கு, இதை அறவே ஒழிப்பதற்கு போலீஸ் அதிகாரிகளுக்கு ஏதாவது உத்தரவு போட்டிருக்கிறார்களா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : போலீசார் வருகிற நேரத்தில் அவர்களிடத்தில் இருக்கும் சூதாட்டத்திற்கான ஆயுதங்களை மிகச் சுலபமாகக் கையிலே எடுத்துச் செல்லக்கூடியதாக இருப்பதால், அதை எடுத்துக்கொண்டு ஓடி ஒளிந்துவிடுகிறார்கள். மாண்புமிகு

உறுப்பினர் அப்படிப்பட்டவர்களைப் பார்க்கும் நேரத்தில் இரகசிய மாகப் போலீசுக்குப் போன் செய்து பிடித்துக் கொடுக்க வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

சென்னை நகரிலுள்ள அன்னியர் சிலைகள்

* 138 வினா—என். கிட்டப்பா : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை நகரில் உள்ள அன்னியர் சிலைகளை அகற்றிவிட அரசு உத்தேசித்துள்ளதா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அந்நியர் சிலைகள் உள்ள இடங் களில் வேறு சிலைகளை வைப்பதற்காக ஏற்பாடுகள் செய்யும் வரையில், அவை இருந்த இடத்திலேயே இருக்கலாம் என்று ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டுள்ளது.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, சென்னை நகரிலுள்ள அந்நியர் சிலைகளை அகற்றிட வேண்டுமென்று பொதுமக்களிட மிருந்து கோரிக்கைகள் ஏதேனும் அரசுக்கு வந்துள்ளதா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அந்நியர் சிலைகளை அகற்ற வேண்டுமென்று பொதுமக்களிடமிருந்து குறிப்பாக எந்தக் கோரிக்கைகளும் வராவிட்டாலும் அப்படிப்பட்ட ஒரு கருத்து நீண்ட நாட்களாக நிலவி வருகிறது. ஆனால், 1957-ம் ஆண்டு மே திங்களில் நாடாளுமன்றத்தில், அந்நியர் சிலைகள், சின்னங்கள், ஓவியங்கள் இவைகளை அகற்ற வேண்டும் என்ற ஒத்திவைப்புப் பிரே ரணை வந்தபோது, பொதுவாக படிப்படியாக இச் சிலைகள் அகற் றப்பட வேண்டுமென்றும், தேசீய உணர்ச்சியைப் புண்படுத்தக்கூடிய சிலைகள், சின்னங்கள் இருந்தால் அவை உடனே அகற்றப்பட நட வடிக்கை எடுக்கவேண்டும் என்றும் அப்போதைய பிரதம அமைச்சர் தனது கருத்தைத் தெரிவித்தார். அதற்குப்பிறகு நமது மாநிலத்திலே நேப்பியர் பார்க் அருகே இருந்த "காரன்வாலிஸ்" சிலையும், மௌண்ட்சாலை வெல்லிங்டன் பாலத்தின் அருகே இருந்த "வெல்லிங்டன்" சிலையும் அகற்றப்பட்டன.

திரு. கே. விநயகம் : அந்நியர்கள் நம் நாட்டை ஆண்டார்கள் என்கிற ஞாபகம் எப்பொழுதுமே நமக்கு உறுத்த வேண்டுமென்று சொல்லித்தான், இப்படிப்பட்டவர்களிடமிருந்தெல்லாம் விடுதலை பெற்ற நாடு என்று தெரிய வேண்டுமென்ற அந்தக் காரணத்திற்காகத் தான், மீண்டும் நாம் அடிமை ஆகக்கூடாது என்று ஞாபக மூட்டத்தான் இந்தச் சிலைகள் இருக்க வேண்டுமென்று, முன்னே ஒரு அமைச்சர் பதில் சொன்னார்கள். அந்தக் கருத்தைத் தாங்கள் ஏற்றுக் கொள்கிறீர்களா ? அல்லது இவைகளை நடைமுறையிலே நாளுக்குநாள் எடுத்துவிடலாம் என்ற அந்தக் கருத்தை நீங்கள் ஆதரிக்கிறீர்களா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இதற்கு முன்பு அந்நியர்கள் நம்மை ஆண்டார்கள் என்பதற்கு அடையாளமாக அவைகள் இருக்க வேண்டுமென்று யார் கூறியிருந்தாலும் நான் அதை ஏற்றுக்கொள்